# செயலாற்றுகை அறிக்கை- 2013

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு
8 ஆம் மாடி,
செத்சிரிபாய இரண்டாம் கட்டம்,
பத்தரமுல்லை

தொலைபேசி 011 - 2187075
தொலைநகல் 011-2187071
இணையத்தளம் www.cdjedmin.gov.lk



அதிமேதகு சனாதிபதி
மஹிந்த ராஜபக்ஷ



ஏ.பி. புஷ்பகுமார அவர்கள்
தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள்
தோட்ட அபிவிருத்தி கௌரவ அமைச்சர்



பீ. அன்ரனி விக்டர் பெரேரா அவர்கள்
தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள்
தோட்ட அபிவிருத்தி
கௌரவ பிரதி அமைச்சர்

## உள்ளடக்கம்

**பக்க இலக்கம்**


**புகைப்படங்கள்,அட்டவணைகள் மற்றும் குறிப்புக்கள் தொடர்பான விபரங்கள்** **55**

**அமைச்சின் தொலைநோக்கும் பணிகளும்** **57**

1. அமைச்சின் பணிகளும் பொறுப்புக்களும் 58
2. அமைச்சை நிறுவிய போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளுடன் கூடிய நிலைமைகள் 59
3. அமைச்சின் உபாய மூல அணுகுமுறை 60
4. அமைச்சின் குறிக்கோள்கள் 61
5. அமைச்சின் ஒழுங்கமைப்புப்பதவணி 63
6. அமைச்சோடு இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பான அறிமுகம் 64
7. அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்கிடையே காணப்படுகின்ற நிதிசார் பொறுப்புக் கூறுதல் மற்றும் பொறுப்பாதலின் இயல்பு 65
8. 2013 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட விஷேட வெற்றிகள் 66-75
9. 2013 ஆம் ஆண்டின் புதுக் கோட்பாட்டின் மீது கட்டியெழுப்பப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 76-84

9.1 நகரபுறப் பிரதேச தெங்குப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் 76

9.2 கப்றுகய் பரப்புறய் 77

9.3 கப்றுக ஊழியப் பாதுகாப்பு 79

9.4 தெங்குப் பயிர்ச் செய்கைக்கானசேதனப் பசளை உற்பத்தியை பயன்பாட்டையும் பிரபல்யபடுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்குமான நிகழ்ச்சித்திட்டம் 80

9.5 தெங்குக் கலாச்சார மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் 81

9.6 இணைய வலைப்பின்னல்படுத்தப்பட்ட தேங்காய் ஏலவிற்பனை 82

9.7 தரம் வாய்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் நோக்கோடு தென்னைசார் 82கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்திப் பிரயோக முறைகளை (GMP) அறிமுகப்படுத்தலும் செயற்படுத்தலும்

9.8 மாவாக்கப்பட்ட தேங்காய்ப் பால் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் 83

9.9 உயர்ந்த மட்டத்திலான நிலப் பயன்பாடும் அறுவடை மேம்படுத்தலும் 83

9.10 மாதிரித் தோட்ட அபிவிருத்தி 84

10. அமைச்சின் வழிகாட்டலோடு தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் 85-91

10.1 கப்றுக புறவர நிகழ்ச்சித் திட்டம் 85

10.2 கப்றுகய் சிப்நெனய் நிகழ்ச்சித் திட்டம் 86

10.3 வெலிகம நோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் 87

10.4 வலைப்பின்னல்படுத்தப்பட்ட தரவுத்தளம் 87

10.5 கப்றுக செய்திப் பத்திரிகை அநுபந்தம் 87

10.6 தென்னை புதிய / மீள் /கீழ்ப்பயிரிடல் மானியம் 88

10.7 திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் 89

10.8 சமயத்தலக் காணி தெங்குப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் 89

10.9 கப்றுக முதலீட்டுக் கடன் நிகழ்ச்சித்திட்டம் 89

10.10 மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 90

10.11 தெங்குசார் கைத்தொழில்களை ஆரம்பித்தல் / நடைமுறையிலுள்ள கைத்தொழில்களின் அபிவிருத்திக்குத் தேவையான தொழிநுட்ப அறிவை வழங்கல் 90

10.12 சிரட்டைகள், தேங்காய் மட்டைகளை சேகரித்து கைத்தொழிலுக்கு ஆற்றுப்படுத்தல் 91

10.13 கப்றுக உற்பத்தி ஊக்குவிப்பு நிவாரணக் கடன் திட்டங்களை அமுல்படுத்தல் 91

10.14 வழமையாக தெங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத பிரதேசங்களின் தெங்குப் பயிர்ச் செய்கைக்கான பொருத்தப்பாடு தொடர்பான மண்ணாய்வு மதிப்பீடு 91

11 அமைச்சின் நிர்வாகமும் கணக்கு முறையும் 92-96

11.1 அமைச்சின் பதவிகளும் பணியாட் குழுவினர்களும் 92

11.2 அமைச்சின் நிருவாகம் 92

11.3 அமைச்சின் கணக்கு முறை 95

11.4 2013 ஆம் ஆண்டின் பொதுத் தாளாண்மை செயற்குழு 96

11.5 அமைச்சின் கணக்காய்வு 96

**புகைப்படங்கள், அட்டவணைகள் மற்றும் குறிப்புக்கள் தொடர்பான விபரங்கள்**

**புகைப்படங்கள்** **பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| 8.1 | நாட்டின் மகுடம் 2013 முதலாம் இடத்திற்குரிய விருதினை அதிமேதகு சனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொள்ளல் | 66 |
| 8.2 | 2013 தேசத்தின் மகுடம் முதலாம் இடத்திற்குரிய சான்றிதழ் | 66 |
| 8.3 | இயற்கை நார் கருத்தரங்கின் ஆரம்பக் கட்டம் | 67 |
| 8.4 | கௌரவ அமைச்சர் அவர்கள் சர்வதேச இயற்கைநார் கருத்தரங்கில் உரையாற்றுகையில் | 68 |
| 8.5 | கௌரவ பிரதி அமைச்சர் அவர்கள் பதவியேற்கும் சந்தர்ப்பம் | 68 |
| 8.6 | கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோர் முதலாம் காணொளிக்கருத்தரங்கில் கலந்து கொண்ட போது | 69 |
| 8.7 | கப்றுக செய்தித் தாளின் முதலாம் ஆண்டு நிறைவை நினைவு கூர்கையில் | 70 |
| 8.8 | பட்டதாரிகள் பயிற்சியின் போது ஒரு சந்தர்ப்பம் | 71 |
| 8.9 | கப்றுக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கௌரவ அமைச்சரினால் தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுகையில் | 73 |
| 8.10 | கௌரவ அமைச்சர் கியூபா நாட்டின் கௌரவ விவசாய அமைச்சரினுடனான சந்திப்பு | 74 |
| 8.11 | கௌரவ அமைச்சர் கியூபா நாட்டின் அலுவலர்களுடனான கலந்துரையாடலொன்றில் | 74 |
| 8.12 | கௌரவ அமைச்சர் தன்சானியாவின் அரசாங்க அலுவலர்களுடனான கலந்துரையாடலொன்றில் | 75 |
| 8.13 | கௌரவ அமைச்சர் தன்சானியாவின் அரசாங்க அலுவலர்களுடன் நினைவுச் சின்னங்களை பரிமாறிக் கொள்கையில் | 75 |
| 9.1 | நகரப் பிரதேசங்களின் தெங்குப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து வைத்து கௌரவ அமைச்சரினால் தென்னங் கன்றொன்று வழங்கப்படும் சந்தர்ப்பம் | 76 |
| 9.2 | கப்றுகப் பறபுரய் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பத்தில் கௌரவ பிரதி அமைச்சர் தாய் ஒருவருக்கு தென்னங் கன்றொன்றை வழங்கும் சந்தர்ப்பம் | 77 |
| 9.3 | கப்றுக ஊழியர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பம் | 79 |
| 9.4 | சேதனப் பசளை உற்பத்தியையும் மற்றும் பயன்பாட்டையும் பிரபல்யப்படுத்தும் பயிற்சி | 80 |

9.5 பாசிக்குடா கலாச்சாரப் பூங்காவின் நுழைவாயில் 81

9.6 பாசிக்குடா கலாச்சார பூங்காவின் கண்காணிப்புச் சுற்றுலாவில் கலந்து கொண்ட கௌரவ அமைச்சர் வெளிநாட்டவர் குழுவினரோடு 82

10.1 கௌரவ அமைச்சர் கப்றுக புறவர ஒன்றை அங்குரார்ப்பணம் செய்கின்றசந்தர்ப்பம் 85

10.2 கப்றுகய் சிப்நெனய் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கௌரவ அமைச்சர் 6 ஆம் ஆண்டு மாணவியொருவருக்கு தென்னங் கன்றுகளை பகிர்ந்தளிக்கின்ற போது 86

10.4 குருவிட்ட சிறைச்சாலைக் கைதிகளுக்கான தெங்குசார் உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றின் போது 90

## அட்டவணைகளும் குறிப்புக்களும்

5.1 அமைச்சின் ஒழுங்கமைப்புப் பதவணி 63

7.1 அமைச்சு மற்றும் நிறுவனங்கள் என்பவற்றிற்கிடையிலான நிதிசார் பொறுப்புக் கூறுதல் மற்றும் பொறுப்பாதலின் இயல்பு 65

11.1 அட்டவணை அமைச்சின் பதவிகளும் பணியாட் குழுவினர்களும் 92

11.2 அட்டவணை ஆட்சேர்ப்பும் அமைச்சுக்கான இடமாற்றமும் 93

11.3 அமைச்சின் அலுவலர்கள் ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றப்படல் 94

11.4 அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆண்டறிக்கைகள் 94

# தொலைநோக்கு

இலங்கை உலகத்தின் மிகச் சிறந்த தெங்குப் பயிர்ச் செய்கையாளராதல்.

# பணிகள்

**மகிந்த சிந்தனை மற்றும் மகிந்த சிந்தனை தொலைநோக்கு என்பவற்றுக்கமைய தெங்குக் கைத்தொழிலின் விளைச்சல், இலாபம் மற்றும் நிலைத்த தன்மை என்பவற்றை அதிகரிக்கச் செய்தல்.**



# தெங்கு அபிவிருத்தி அமைச்சு

## 01. அமைச்சின் பணிகளும் பொறுப்புக்களும்

2010 நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அதிவிஷேட வர்த்தமானி பத்திரிகையூடாக தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு நிறுவப்பட்டது.

மஹிந்த சிந்தனை தொலைநோக்கு மற்றும் அரசாங்கத்தினால் அமுல் நடாத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள வேறு தேசிய கொள்கைகள் என்பவற்றின் மீது அமைக்கப்பட்டுள்ள தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி விடயத்தினதும் அமைச்சினதும் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள,

- தெங்குப் பயிர்ச் செய்கை சபை
- தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
- தென்னை ஆராய்ச்சி நிலையம்
- வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்ட கம்பனி
- வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி

ஆகிய நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஆக்குதல்.

- உரிய குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதற்காக தேசிய திட்டமிடல் அதிகாரிகளோடு,இணக்கப்பாடொன்றுக்கு வந்த காலக்கெடு மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வளங்களின் தொகை என்பவற்றுக்குள் மேற்குறித்த கொள்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அமுல்படுத்தலும் வழிநடாத்தலும்

- அமைச்சின் விடயப்பரப்பிற்குரித்தான பொது மக்கள் சேவைகளை வினைத்திறனோடும், மக்கள் நலன்பயக்கத்தக்க விதத்திலும் வழங்குதல்.

- வீண்விரயம், ஊழல் என்பவைஇல்லாதொழிக்கப்பட்ட நிலையில் அமைச்சிற்குரிய பணிகள் ஆற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உறுதுணை புரியும் விதத்தில் நவீன முகாமைத்துவ தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் திட்டங்களையும் மறுசீரமைத்தல்.

- பன்மைப்பயிர்ச் செய்கைகள், இணைப்புச் செய்யப்பட்ட பண்ணை முறைமைகள் என்பவற்றினூடாக பெருந்தோட்டக் காணிகளின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளலும் அதனூடாக உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் அதிகரிக்கச் செய்தலும்.

- தெங்குக் கைத்தொழில் அபிவிருத்தி, ஊக்குவிப்பு, ஆராய்ச்சியோடு தொடர்புடைய நடவடிக்கைகள்.

- தெங்குப் பயிர்ச் செய்கை சபை, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, தென்னை ஆராய்ச்சி நிலையம், வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்டக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி ஆகிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களையும் அமுல்படுத்தல்.

- தெங்குப் பயிர்ச் செய்கை சபை, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, தென்னை ஆராய்ச்சி நிலையம், வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்ட கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி ஆகிய நிறுவனங்களைமேற்பார்வை செய்தல்.

கீழ்வரும் நியதிச் சட்டங்களை நிருவகித்தல்

- தெங்குப் பயிர்ச் செய்கை சபைச் சட்டம் (1971 ன் 46ஆம் இலக்கம்))
- தெங்கு அபிவிருத்திச் சட்டம் - சிறப்பேற்பாடுகள் சட்டம் (1984 ன் 45 ஆம் இலக்கம்)
- தெங்கு அபிவிருத்திச் சட்டம் (1971 ன் 46 ஆம் இலக்கம்)
- தும்புநார் சட்டம் (1967 ன் 17 ஆம் இலக்கம்)
- தெங்கு உற்பத்தி கட்டளைச் சட்டம் (1935 ன் 13 ஆம் இலக்கம்)
- தென்னை ஆராய்ச்சி சபைச் சட்டம் (1950 ன் 37 ஆம் இலக்கம்)

தற்போது அமுலில் உள்ளவையும் இன்னொரு அமைச்சின் கீழ் குறிப்பாக கையளிக்கப்படாதவையுமான மேற்குறித்த விடயங்களுக்குரிய ஏனைய அனைத்து நியதிச் சட்டங்களும்.

## 02. அமைச்சை நிறுவிய போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளுடன் கூடிய நிலைமைகள்

தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் தென்னையோடு தொடர்புடைய கைதொழில்துறை நீண்ட வரலாறொன்றுடன் கூடியதாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்குப்போதியளவு பங்களிப்பை வழங்கிய போதிலும் விஷேடமாக இனங்காணப்பட்ட பிரச்சினைகள் பல காணப்பட்டன.

ஒரு ஹெக்டெயார் தென்னங் காணியிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற சாராசரி அறுவடை, வலயத்தின் சில நாடுகளோடு ஒப்பிடுகையில் குறைந்த பெறுமானமொன்றைக்காட்டி நின்றதோடு, அதை ஒரு தனியான பயிராக மாத்திரம் பயிரிடுவது பொருளாதார ரீதியாக நன்மை பயக்கத்தக்கதாகக்காணப்படவில்லை. தெங்குப் பயிர்ச் செய்கைசார் ஊடுபயிர்களின் பயிர்ச்செய்கை கணிசமானளவில் மேற்கொள்ளப்பட்ட போதிலும்

அவ்வுற்பத்திகளுக்கு முறையான சந்தையொன்று கிடைக்கப்பெறவில்லை.அதே போன்று ஊடுபயிர்கள் தொடர்பாக விவசாயிகளின்எதிர்ப்புணர்வும் வெளிப்படையாகக்காணப்பட்டது. முதலீட்டுப் பற்றாக்குறை,பயிர்ச் செய்கைக் காணிகளுக்குத் தேவையானளவு பசளைகள் கிடைக்கப்பெறாமை என்பன இதன்பால் செல்வாக்குச் செலுத்தின. சிறு தென்னந் தோட்ட உரிமையாளர்களின் முயற்சிகள் மிக்க கீழ் மட்டத்தில் காணப்பட்டமை காரணமாக முறையான தோட்ட முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாததோடு, உற்பத்தி, விற்பனைகளுக்கான வரைபுகளும் மிகக் குறைந்தபெறுமானத்தையே கொண்டிருந்தன.

தெங்குசார் கைத்தொழில் துறையும் நீண்ட காலமாக ஓரினத்தன்மைக் கொண்டதாக விளங்கியதோடு, உற்பத்தி பன்முகப்படுத்தலும் உற்பத்திகளுக்கான பெறுமதிகள் கூட்டப்படுகின்ற சாத்தியமும் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டன. வலுவான நிலைபேறான சனசமூக அமைப்புக்கள் காணப்படாமையினால் கைத்தொழில்துறைசிதறடிக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டது.அவ்வாறே ஏற்றுமதிக் கேள்வியை விருத்தி செய்து கொள்வதில் பாரியளவிலான ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டமையினால் அதற்கு பொருத்தமானவாறு தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, தெங்குப் பயிர்ச் செய்கை சபை, மற்றும் தென்னை ஆராய்ச்சி நிலையம் என்பவற்றை ஒரு வழிப்படுத்துவது காலத்தின் தேவையாக காணப்பட்டது.

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒரு தனி அமைச்சாக தாபிக்கப்படுவதன் பால் மேற்குறித்த சாத்திய வளங்களும் அழுத்தத்தை ஏற்படுத்தியன.

## 03. அமைச்சின் உபாய மூல அணுகுமுறை

இந்நிலைமையைத்தவிர்ந்து கொள்வதற்காக அமைச்சு அடிப்படையான உபாய மூலங்கள் சிலவற்றை இனங்கண்டு கொண்டது.

தெங்கு உற்பத்தியைத் தேசிய தேவைப்பாட்டுக்குப் பொருத்தமான விதத்தில் விருத்தி செய்து கொள்வதற்காக தெங்குப் பயிர்ச் செய்கையைப் பாரியளவில் விரிவுபடுத்தவும், தற்போது காணப்படுகின்ற தென்னங் காணிகளின் விளைச்சலை அதிகரிக்கச் செய்வதற்காக அவற்றின் மண்ணை வளமிக்கதாக மாற்றவும் நடவடிக்கையெடுக்க வேண்டியிருந்தது.

வறட்சிக்கும் நோய்களுக்கும் ஈடுகொடுக்கத்தக்க உயர் அறுவடையைப் பெற்றுத்தரக்கூடிய புதிய இனங்களைப்பயிரிடுவதும்,பயிர் நிலங்களின் வெறுமையான இடங்களை இனங்கண்டு அவற்றிடையே பயிர்களை நடுவதும் அடையாளம் காணப்பட்ட மற்றொரு உபாய மூலமாகும்.

தெங்குப் பயிர்ச் செய்கை ஒரு தனித்த பயிராக மாத்திரம் விளங்குவதிலும் பார்க்க அத்தோட்டங்களில் ஊடுபயிர்களையும், விலங்கு வேளாண்மையையும் ஊக்குவித்தல் பொருளாதார ரீதியாக நன்மை தரத்தக்கவையாதாலால் அதனை விவசாயிகளிடையே பிரபல்யப்படுத்துதல் மற்றொரு முக்கியமான உபாய மூலமாக இனங்காணப்பட்டது.

தெங்குக் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்காக கப்றுக புறவர நிகழ்ச்சித் திட்டம் மிக முக்கியமான ஓர் உபாய மூலமாக அடையாளம் காணப்பட்டதோடு, கப்றுக சங்கங்களினுடாக பயிர்ச் செய்கைத் துறை போன்றே கைத்தொழில் துறையினதும் ஊக்குவிப்புக்கு பாரியளவிலான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்ய திட்டமிடப்பட்டது.

கைத்தொழில் துறையின் தொழில் கொள்வோரின் பாதுகாப்புப் போன்றே தொழிலின் அபிமானத்தையும் உயர் நிலையில் வைத்திருப்பதற்காக நீண்டகால காப்புறுதி முறையொன்றை உருவாக்குதலும் புதிய உபாய மூலத்தின் அணுகுமுறையொன்றாகும்.

ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்துவதனூடாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு இத்துறையினூடாக வழங்க முடிந்த நேரடிப் பங்களிப்பு மிக உயர்ந்த பெறுமானமொன்றைப் பெறுகின்றது. இதற்காக கைத்தொழில் துறைக்குத் தேவையான உள்ளீடுகளான காய்த் தேங்காய்களுக்காக வீட்டு மட்டத்தில் நிலவுகின்ற நுகர்வைக் குறைந்த மட்டத்தில் பேணி, அதற்கான ஒரு பதிலீடாக மாவாக்கப்பட்ட தேங்காய்ப் பால் மற்றும் தேங்காய் க்ரீம் போன்ற உற்பத்திகளின் நுகர்வை ஊக்குவித்தலும் மற்றொரு உபாய மூலமாகும். இதனூடாக 70% காணப்படுகின்ற வீட்டலகு மட்டத்திலான காய்த் தேங்காய்களின் நுகர்வை முடிந்தளவு குறைத்துக் கொள்வது இலக்காகக் கொள்ளப்பட்டது.

## 04. அமைச்சின் குறிக்கோள்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உபாய மூலங்களில் இனங்காணப்பட்ட பல நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல் செய்யப்படுவதோடு, இங்கு அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகள் வருமாறு.

- நாட்டின் உணவு மற்றும் கைத்தொழில் ரீதியான கேள்வியை ஈடுசெய்வதற்காக எதிர்வரும் ஆறாண்டுகளுக்குள் (2011 முதல் 2016 வரை) ஏற்கனவேயுள்ள தெங்குப் பயிர்ச் செய்கைக் காணிகளின் தேங்காய்களின் உற்பத்தியை ஒரு வருடத்திற்கு 3650 மில்லியன்காய்களாக அதிகரிக்கச் செய்தல்.
- தெங்கு நுகர்வாளர்களினதும் தயாரிப்பாளர்களினதும் கேள்வியை ஈடுசெய்வதற்காக போதியளவில்காய்களின் விளைச்சலின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தென்னை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்.
- தெங்குப் பயிர்ச் செய்கை, இலகு மற்றும் மத்தியரக தெங்குசார் கைத்தொழில்கள் என்பவற்றின் பால் கவனம் ஈர்க்கப்படுவதற்காக சிறு காணிச் சொந்தக்காரர்களை சனசமூக அமைப்புக்களாக ஒழுங்கமைத்து அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி வறுமையை ஒழித்தல்.
- விலங்கு வேளாண்மை / ஊடுபயிர் பன்முகப்படுத்தல் என்பவற்றினூடாக தென்னங் காணிகளின் விளைச்சலையும் பண்ணைகளின் வருமானத்தையுத் அதிகரிக்கச் செய்தல்.
- சூழல் நேயம்மிக்க,பொருளாதார ரீதியாக பயன்தரவல்ல தெங்குசார் கைத்தொழில்களை

ஊக்குவித்தல்.

- வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்தை அதிகரிக்கச் செய்வதற்காக உலகச் சந்தையில் போட்டித் தன்மையை எதிர்கொள்வதை இயலச் செய்யும் பொருட்டு தேங்காய் உற்பத்திகளின் தரத்தை உயர்த்தல்.
- தெங்குக் கைத்தொழிலின் மாறுபடுகின்ற தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக புதிய தொழிநுட்ப முறைகளை உருவாக்கலும், நடைமுறையிலுள்ள தொழிநுட்ப முறைகளை விருத்தி செய்தலும்.
- தெங்குசார் கைத்தொழில்களின் முறைசார் மற்றும் முறைசாராத துறைகளை பன்முகப்படுத்துவதனூடாக வருமான உழைப்பை அதிகரிக்கச் செய்தல்.

## 05. அமைச்சின் ஒழுங்கமைப்புப் பதவணி




**5.1 அமைச்சின் ஒழுங்கமைப்புப் பதவணி**

## 6. தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பான அறிமுகமொன்று

தெங்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ள 5 நிறுவனங்களும் 2010 நவம்பர் மாதம் 22 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் கையேற்கப்பட்டன.

### 6.1 தெங்கு அபிவிருத்தி அதிகார சபை (தெ. அ. ச)

1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தினூடாக தாபிக்கப்பட்டுள்ளதெங்கு அபிவிருத்தி அதிகார சபை, தெங்குக் கைத்தொழில் துறையின் சட்டரீதியான மற்றும் ஒழுக்காறுகை நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகும். தெங்குக் கைத்தொழில் துறையை ஒழுக்காறுகை செய்தல், விதிகளை விதித்தல், மேற்பார்வை செய்தல், தொழிநுட்ப வழங்கல் என்பவற்றை ஆற்றுவதோடு, கைத்தொழில் அபிவிருத்திக்குரியஇடைத்தரகராகவும் அது செயற்படுகின்றது.

### 6.2 தெங்குப் பயிர்ச் செய்கை சபை (தெ. ப. ச)

மேற்குறித்த 1971 ஆம் ஆண்டின் தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளூடாகத் தாபிக்கப்பட்ட தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் பிரதான குறிக்கோள்கள் நாட்டின் தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்காக வினைத்திறன் மிக்க விரிவாக்கல் சேவையொன்றை மற்றும் அறிவுறுத்தலைவழங்கலூடாக தென்னை உற்பத்தி மற்றும் விளைச்சளை அதிகரிக்கச் செய்தல், நிலைத்த தெங்குப் பயிர்ச் செய்கையை தாபித்தல் என்பனவாகும். அக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான உற்பத்ததித் காரணிகளையும் நிதியுதவிகளையும் வழங்கல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான ஒரு பணியாகும். நாடெங்கிலும் அமையப் பெற்றுள்ள 18 பிரதேச அலுவலகங்களினூடாக இந்த விரிவாக்கல் சேவை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 6.3 தென்னை ஆராய்ச்சி நிறுவனம் (தெ. ஆ. நி)

1929 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மேற்குறித்த சட்டத்தினூடாக தென்னை ஆராய்ச்சி சபையாகத் தாபிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான குறிக்கோளாவது ஆராய்ச்சியை மேற்கொள்வதனூடாக புதிய தொழிநுட்ப முறைகளை விருத்தி செய்து தெங்குப் பயிர்ச் செய்கையின் உற்பத்தியை உயர்த்துவதாகும். புதிய தென்னை இனங்களை அறிமுகப்படுத்துவனூடாக பயிர்ப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் தயாரிப்புத் துறையோடு தொடர்புடைய தெங்குசார் உற்பத்திகளின் பெறுமதிகளைக் கூட்டல் மற்றும் புதிய உற்பத்திகளை உருவாக்கல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முக்கியமான ஒரு பணியாகும்.

### 6.4 வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி (சி. பெ. க)

அரசாங்கக் கம்பனியொன்றான வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி 1992 யூன் 18 ஆம் திகதி சட்டமாக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இக்கம்பனி பயிர்ச் செய்கை, உற்பத்தி மற்றும் தயாரிப்பு சார்ந்த விவசாய உற்பத்தி முறைமைகளின் பன்முகப்படுத்தல் தெங்கு விற்பனை மற்றும் ஊடுபயிர் பயிர்ச் செய்கை என்பவற்றில் ஈடுபட்டுள்ளது.

### 6.5 வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்டக் கம்பனி (கு. பெ. க)

அரசாங்கக் கம்பனியொன்றான வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்டக் கம்பனி 1992 யூன் 22 ஆம் திகதி சட்டமாக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இக்கம்பனி பயிர்ச் செய்கை, உற்பத்தி மற்றும் தயாரிப்பு சார்ந்த விவசாய உற்பத்தி முறைமைகளின் பன்முகப்படுத்தல் தெங்கு, இறப்பர் விற்பனை மற்றும் ஊடுபயிர் பயிர்ச் செய்கை என்பவற்றில் ஈடுபட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டிற்கான விவசாய முயற்சிபரிசளிப்பு விழாவில் பாரியளவிலான விவசாய தாளாண்மைகள் மற்றும் விவசாய வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள சர்வதேச கம்பனிகளை மேவிச் சென்று **வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்டக் கம்பனி அகில இலங்கையில் முதலாம் இடத்திற்கான தங்கப் பதக்கத்தையும் பாரியளவிலான உற்பத்தியாளருக்கான (பெருந்தோட்டத் துறை) தங்கப் பதக்கத்தையும் வென்றது.**

## 7. அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்கிடையே காணப்படுகின்ற நிதிசார் பொறுப்புக் கூறுதல் மற்றும் பொறுபாதலின் இயல்பு




**7.1** அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்கிடையே நிதிசார் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பாதல் என்பவற்றின் இயல்பு

# 8. 2013 ஆம் ஆண்டில் அமைச்சினால் ஈட்டப்பட்ட விஷேட வெற்றிகள்

மகிந்த சிந்தனை, மகிந்த சிந்தனைத் தொலைநோக்கு வெளிப்படுத்துகைகளுக்கமைய தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் கைத்தொழில் துறையில் மறுமலர்ச்சியொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை உருவாக்கி அவற்றை செயற்படுத்தியும் இணைந்த நிறுவனங்களை மிகச் சிறந்த முறையில் இலக்குகளை நோக்கி வழிநடாத்தியும் 2013 ஆம் ஆண்டில் அமைச்சினால் எதிர்பார்க்கப்பட்ட பணிகளை மிக உயர்ந்த மட்டத்தில் ஆற்றிக் கொள்வதில் வெற்றி காணப்பட்டுள்ளது. அமைச்சு தாபிக்கப்பட்டு மூன்றே மூன்று ஆண்டுகள் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் மேற்குறித்த ஆக்கபூர்வமான புதிய கோட்பாடுகளினூடாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த முடியுமாயிற்று.

**அமைச்சு செத்சிரிபாயவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.**

இதுவரை ரி.பி. ஜாயா மாவத்தையில் அமையப் பெற்றிருந்த தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சை அனைத்து வசதிகளுடனும் கூடிய பத்தரமுல்ல செத்சிரிபாய 2 ஆம் கட்டத்தின் புதிய கட்டிடத்திற்கு எடுத்துச் செல்ல முடியுமாயிற்று.

**2013 ஆம் ஆண்டின் நாட்டின் மகுடம் கண்காட்சி**

2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற 7 ஆம் நாட்டின் மகுடம் கண்காட்சிக்காக அமைச்சு அதன் இணை நிறுவனங்களோடு ஒருங்கிணைந்து சமர்ப்பித்த சுற்றாடல் நேயமிகு கூடம் கண்காட்சியில் மிகச் சிறந்த கூடத்திற்கான இணை முதலாம் இடத்தை சுவீகரித்துக் கொண்டது.



8.1 நாட்டின் மகுடம் 2013 முதலாமிடத்திற்குரிய விருதை அதிமேதகு சனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொள்ளல்




8.2 நாட்டின் மகுடம் 2013 முதலாம் இடத்திற்கான சான்றிதழ்

**இயற்கைநார் தொடர்பான சர்வதேச கருத்தரங்கை நடாத்தல்.**

உலகத்தில் இயற்கைநார் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற நாடுகளிடையிலான ஒத்துழைப்பை விருத்தி செய்தல், இயற்கை நார்களுக்கான சர்வதேச சந்தையின் ஊக்குவிப்பு மற்றும் இயற்கைநார் கைத்தொழிலுக்கான சர்வதேசக் கொள்கை ஒன்றை நிறுவுதல், திருத்தங்களை மேற்கொள்ளலும், உத்திகளை தயாரித்தலும் என்ற நோக்கங்களின் அடிப்படையில் 39 ஆம் "இயற்கைநார்கள் தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கு" மற்றும் 37 ஆம் "சர்வதேச கடின இயற்கைநார் தொடர்பான கருத்தரங்கு" என்பன இவ்வமைச்சின் இணைப்பு நடவடிக்கையோடு 2013 நவம்பர் 04 – 07 ஆம் திகதி வரை இலங்கையில் நடாத்தப்பட்டது.

அதில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்காக இந்த சர்வதேச அமைப்பின் தலைமைத்துவம் இலங்கைக்கு உரித்தானது.




**8.3** சர்வதேச நார்கள் கருத்தரங்கின் அங்குரார்ப்பண அமர்வு




8.4 கௌரவ அமைச்சர் அங்குரார்ப்பண அமர்வில் உரையாற்றுகையில்

**புதிய பிரதி அமைச்சரின் நியமனம்**

புத்தளம் மாவட்டத்தின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பி. விக்டர் பெரேரா அவர்கள் 2013.10.11 ஆம் திகதி தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



**8.5**
கௌரவ பிரதி அமைச்சர் கடமைகளைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில்

வீடியோ கருத்தரங்கு முறைமை ஆரம்பித்து வைக்கப்படல்
.

அமைச்சு மற்றும் அமைச்சோடு இணைந்த ஏனைய இணை நிறுவனங்களில் செலவு மற்றும் நேர முகாமைத்துவத்தை மேற்கொண்டு நிறுவனங்களின் விளைபயனை விருத்தி செய்யும் நோக்குடன் அமைச்சின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களையும் ஏனைய கூட்டங்களையும் நடாத்துவதற்கு skype தொழிநுட்பத்தினூடாக வீடியோ கருத்தரங்கு முறை பயன்படுத்தப்படுவதோடு, இதன் கீழ் முதலாவது முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 2013.10.07 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இம்முறையின் பெறுபேறாக ஒரு கூட்டத்திற்கு ஒரு நிறுவனத்திற்கு ரூபா 10,000 என்ற நிதியை மீதப்படுத்த முடியுமாயிற்று





**8.6**கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளர் முதலாவது வீடியோ கருத்தரங்கில் பங்கு பற்றிய போது

கப்றுக செய்திப் பத்திரிகை அனுபந்தம் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்டமை

தெங்குசார் சமூகத்திற்கு கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் தகவல்கள் போன்றே இத்துறையின் புதிய போக்குகள் தொடர்பான தகவல்களை வழங்கி தெங்குசார் சமூகம் மற்றும் அமைச்சுக்கிடையே தொடர்பாடல் ஊடகமொன்றாக அமைச்சின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "கப்றுக" செய்திப் பத்திரிகை 2012 ஒக்தோபர் மாதம் முதல் தொடர்ச்சியாக "தினமின""தினகரன்" மற்றும் "டெய்லி நிவுஸ்" செய்திப் பத்திரிகைகளோடு ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக் கிழமை பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.



**8.7**கப்றுக செய்திப் பத்திரிகையின் முதலாம் ஆண்டினை நினைவு கூர்ந்து

தெங்குசார் கைத்தொழில்களை தர நிர்ணயப்படுத்தல்

தெங்குசார் உற்பத்திக் கைத்தொழில்களைத் தர நிர்ணயப்படுத்துவதற்காக இலங்கை தர நிர்யணப்படுத்தல் நிறுவனத்தோடு இணைந்து சிறந்த உற்பத்திப் பிரயோகங்கள் (GMP)நறுக்குத் தேங்காய் கைத்தொழிற்சாலைகளுக்காக 2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அதற்காக மிகச் சிறந்த வரவேற்பொன்று கைத்தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய தேங்காய் எண்ணெய் மற்றும் தும்புக் கைத்தொழில் தொடர்பாகவும் 2014 ஆம் ஆண்டில் இம்முறைமையைசெயற்படுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டது.

27 ஆண்டறிக்கைகளை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தல்

2010 ஆம் ஆண்டில் அமைச்சு நிறுவப்பட்டதன் பின்னர் பல ஆண்டுகளாக தாமதித்து வந்த அமைச்சுகுரிய இணை நிறுவனங்களின் 27 வருடாந்த அறிக்கைகளை 2013 ஆகஸ்ட் மாதமளவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க முடியுமாயிற்று.

பட்டதாரி பயிலுநர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

அரசாங்க சேவையில் இணைந்து கொண்ட புதிய பட்டதாரி பயிலுநர்களினதும் அபிவிருத்தி அலுவலர்களினதும் ஆற்றல் விருத்தியை நோக்கமாகக் கொண்டு, கௌரவ அமைச்சரின் கோட்பாடொன்றிற்கமைய 250 பேர் கொண்ட ஒரு குழுவிற்கு 3 நாள் தங்குமிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை அமைச்சின் வழிகாட்டலோடு நடாத்த முடியுமாயிற்று.





8.8 பட்டதாரிகளின் பயிற்சியின் போது ஒரு சந்தர்ப்பம்

**வெலிகம தென்னோலை வாடல் நோயைக் கட்டுப்படுத்தல்**

தென் மாகாணத்தில் பரவிவருகின்ற தென்னோலை வாடல் நோய் ஒழிப்பு மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்காக நோய்வாய்ப்பட்ட மரங்களை அகற்றி, காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடுகள் கொடுப்பனவு செய்யப்பட்டு வருவதோடு, இதுவரை இந்நோய் அப்பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசங்களுக்குப் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**வலைப்பின்னல் படுத்தப்பட்ட செயற்பாட்டு முகாமைத்துவ முறைமையின் வெற்றி**

2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட, அமைச்சின் இணை நிறுவனங்களின் தென்னந்தோட்ட முகாமைத்துவத்திற்கான வலைப்பின்னல்படுத்தப்பட்ட செயற்பாட்டு முறைமை தொடர்ந்தும் வெற்றிகரமாக இயங்கிவருகின்றது. இதனூடாக அமைச்சின் இணை நிறுவனங்களின் தென்னந்தோட்டங்களின் ஊழியர்களின் வருகை தினசரி முற்பகல் 10 மணியளவிலும், தென்னந்தோட்டங்களிலிருந்து அன்றாடம் அறுவடை செய்யப்படுகின்ற தேங்காய்களின் எண்ணிக்கை தினசரி பிற்பகல் 5 மணியளவிலும் கௌரவ அமைச்சர், செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு குறுந்தகவல்களினூடாக பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் அமைச்சின் விடயப்பரப்பிற்குள் வருகின்ற அனைத்துத் தென்னை மரங்களினதும் தினசரி அறுவடை மற்றும் ஊழியர் நிருவாகம் என்பன நன்கு நிருவகிக்கப்பட முடிகின்றது.

**கப்றுக்க புறவர நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுப்பு**

தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் இலகு, மத்திய ரக தெங்குசார் கைத்தொழில்களின் பால் சமூகத்தை ஆற்றுப்படுத்துவதற்காக சிறு காணிச் சொந்தக்காரர்கள் மற்றும் சனசமூக அமைப்புக்களாக அவர்களை ஒழுங்கமைப்புச் செய்து, அவற்றினூடாக தென்னை மரத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகின்ற வறுமை ஒழிப்பை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட **“கப்றுக்க புறவர” நிகழ்ச்சித்திட்டத்தின்** கீழ்2013.12.31 ஆந் தேதிவரை 133 கப்றுக்க புறவர திட்டங்களும் 5319 ஆரம்பச் சங்கங்களும் தாபிக்கப்பட்டுள்ளன. இவை 2016 ஆம் ஆண்டு வரையிலான இலக்கில் முறையே 73%மும் 63 % மும் அகும்





**8.9**கப்றுக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கௌரவ அமைச்சரினால் தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படும் போது

## கியூபாவுடனான தொழிநுட்ப பரிமாற்றங்களும் பயிற்சிகளும்.

அதிமேதகு சனாதிபதி அவர்கள் 2012 ஆம் ஆண்டில் கியூபாவில் மேற்கொண்ட விஜயத்தின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இருபக்க புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ், தெங்குத் துறையின் அபிவிருத்தி தொடர்பான இணக்கப்பாட்டை மீளாய்வு செய்வதற்காக, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் 2013 யூன் மாதம் கியூபாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்டனர். இதன்போது தெங்குத் துறையின் அபிவிருத்திக்கான தொழிநுட்பப் பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சிகள் தொடர்பாக இரு தரப்பிரனரிடையேயும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.



**8.10** கௌரவ அமைச்சர் கியூபா நாட்டின் கௌரவ விவசாய அமைச்சரை சந்தித்தபோது



**8.11**கௌரவ அமைச்சர் கியூபா நாட்டின் அரசாங்க அலுவலர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில்

தன்சானியாவின் நோய்கள், கிருமிகளின் தொல்லை என்பவற்றை ஒழிப்பதற்கு இலங்கையின் அறிவு

அதிமேதகு சனாதிபதி அவர்கள் 2013 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் தன்சானியாவில் மேற்கொண்ட விஜயத்தின் போது, ஏற்படுத்திக் கொண்ட இருபக்க புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் தெங்குத் துறையின் அபிவிருத்தி தொடர்பான இணக்கப்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்ட தூதுக்குழுவொன்று 2013 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் விஜயமொன்றை தன்சானியவிற்கு மேற்கொண்டது. அப்போது தன்சானியாவின் நோய்கள், கிருமிகளின் தொல்லை என்பவற்றை ஒழிப்பதற்காக இலங்கையின் அறிவை பரிமாறிக்கொள்ள இணக்கம் காணப்பட்டது.




**8.12**கௌரவ அமைச்சர் தன்சானியாவின் அரசாங்கத்தின் அலுவலர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில்



**8.13**கௌரவ அமைச்சர்தன்சானியாவின் அரசாங்க அலுவலர்களுடன் நினைவுச் சின்னங்களைப்பரிமாறிக் கொண்ட போது

## 9. 2013 ஆம் ஆண்டின் புதுக் கோட்பாட்டின் மீது கட்டியெழுப்பப்பட்ட புதிய நிகழ்ச்சித் திட்டங்கள்

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஏ.பி. ஜகத் புஷ்பகுமார அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதுக்கொள்கைத்திட்டங்கள் பலவற்றின் ஊடாக உருவாக்கப்பட்ட மிகப் பயன் தரவல்ல நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றை அன்னாரின் வழிக்காட்டல், தலைமைத்துவத்தின் கீழ் அமுல்படுத்த அமைச்சினால் முடியுமாயிற்று. இதன்போது இணைநிறுவனங்களுக்கு மிகச்சிறந்த முறையில் வழிகாட்டி உரிய இலக்கையடைந்து கொள்ளவும் அமைச்சிற்கு முடியுமாயிற்று.

### 9.1நகரப்புற தெங்குப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்



**9.1** நகரப்புற தெங்குப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து கௌரவ அமைச்சர் தென்னங் கன்றொன்றை வழங்கி வைக்கும் சந்தர்ப்பமொன்றில்

நகர வீடமைப்புத் திட்டங்களில் வாழ்கின்ற நகரவாசிகளுக்கு தத்தம் அன்றாட நுகர்விற்கான தேங்காய்களை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது. அவர்களுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட காணித்துண்டை சிறந்த முறையில் பயன்படுத்தி பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதை இலக்காக்கொண்டு புதிய கலப்பினத் தெங்கு இனமொன்று நகரப்புற வீடமைப்புத்திட்டங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது ஒரு வீட்டிற்கு இரண்டு கலப்பின தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்படுகின்றன. இவை 04 ஆண்டு காலத்திற்குள் காய்க்கக் கூடியமையாக விளங்குகின்றமையாலும் மிக உயரமாக வளராத ஒரு விசேட இனத்தாவரமாதலாலும் நகரப்புற மக்களுக்கு மிக எளிதாக தேங்காய்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு புது அனுபவம் வாய்க்கப் பெறுகின்றது.

நகர சனத்தொகை மிக அதிகமாதலால் வீட்டலகின் நுகர்விற்காக சந்தையிலிருந்து தேங்காய்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இதனூடாக மட்டுப்படுத்தப்படுவதால், அத்தொகையைக் கைத்தொழில்களுக்கான மூலப்பொருளாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். நீண்ட காலத்திற்கு கைத்தொழிலுக்கான நிலைத்த மூலப்பொருள் வழங்கலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஏற்றுமதி வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கும் இது மிக முக்கியமாகும்.

இதன் அங்குரார்ப்பண நிகழ்ச்சித்திட்டம் 2013 திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் கீழ் இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள தென்னங்கன்றுகளின் எண்ணிக்கை 1000 என்பதோடு, நகர வீடமைப்புத்திட்டம் பலவற்றை இலக்காகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டம் வெற்றிக்கரமாக அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சித்தி திட்டங்கள் எதிர்காலத்தில் மஹரகம, கெஸ்பாவ, மொறட்டுவை, கொழும்பு, சீதாவாக்கை, பாதுக்க, ஹோமாகம: கடுவெல மற்றும் கொலன்னாவ என்ற பிரதேசங்களிலும் அமுல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு மிகச் சிறந்த முறையில் வழிகாட்ட அமைச்சிற்கு முடியுமாயிற்று.

## 9.2 கப்றுகய் - பரப்புறய்



**9.2**கப்றுகய் பரப்புறய் நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பணத்தின் போது கௌரவ பிரதி அமைச்சர் தாயொருவருக்கு தென்னங் கன்றொன்றை வழங்கி வைக்கும் சந்தர்ப்பம்

மரஞ்செடி கொடிகளும் சுற்றாடலும் மனித வாழ்வோடு இரண்டறக்கலந்து பிணைந்து விட்ட ஒரு விடயமாகும். பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொறுப்பினை தன் தோள் மீது சுமந்தவனாகவே பிறக்கின்றான். இவ்வாறு பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் தனது குழந்தைப் பருவத்தோடு இணைந்து வளரத்தக்க தென்னங் கன்றுகள் 2 ஐ உவந்தளிப்பதன் மூலம், தென்னை மரம், அதனோடிணைந்த சூழல் என்பவற்றின் பால் அன்பு காட்டுகின்ற ஒரு மனிதப் பிறவியை உருவாக்கிக் கொள்ள முடியும். தென்னை மரம் விளைச்சலைத் தருகின்ற 5 வருடத்தில் குழந்தை பாடசாலைக்குள் காலடி எடுத்து வைக்கின்ற போது, அதன் அறுவடை குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம் என்பன நிலைபேறுடையதாய் விளங்க பங்களிப்புச் செலுத்தும்.அது குழந்தையோடு சேர்ந்து வளர்கின்றது. ஆதலால் தென்னை மரம் என்பது ஒரு பரம்பரையின் சொத்தாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடெங்கிலுமுள்ள தாய்மார்களுக்கு 1427 தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணியில் சுகாதார வைத்திய அலுவலர்களும் குடும்ப மருத்துவத் தாதிமாரும் கிராமிய மட்டத்தில் குழந்தையின் வளர்ச்சியையும் தென்னங் கன்றுகளின் வளர்ச்சியையும் பரிசீலனைக்குட்படுத்துகின்றனர். தென்னங் கன்றின் வளர்ச்சி பற்றிய குறிப்பை இடுவதற்கான பத்திரமொன்றும் வழங்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக சமூகத்திற்குள் ஒரு புதிய ஆர்வத்தை உருவாக்குவதில் திணைக்களம் வெற்றி கண்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக சுகாதார அமைச்சு வழங்கிய பங்களிப்பு ஈண்டு மெச்சப்படுகின்றது.

## 9.3கப்றுக ஊழியப் பாதுகாப்பு



**9.3**கப்றுக ஊழியப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவத்தின் போது

தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் கைத்தொழிற்துறையில் தொழில் புரிகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் உயிராபத்து,அவர்கள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பங்களில் எதிர்நோக்க வேண்டி வருகின்ற நிதிக்கட்டுப்பாடு மற்றும் இத்தொழிலுக்குரிய குறைந்த மட்டத்திலான சமூக அங்கீகாரம் என்பவற்றைக்கருத்திலெடுத்து இந்நிலைமைகளை இல்லாதொழிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டமே கப்றுக ஊழியப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமாகும். தெங்குத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகின்ற இந்நிகழ்ச்சித் திட்டம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தோடு ஏற்படுத்திக் கொண்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தந்திற்கமைய அமுல் செய்யப்படுகின்றது.

தெங்குப் பயிர்ச் செய்கை வெளிக்கள அலுவலர்கள் மற்றும் கப்றுக சங்கங்கள் என்பவற்றினூடாக அமுல் செய்யப்படுகின்ற இக்காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக தொழிலாளர்களின் சமூக அங்கீகாரத்தை உயர்த்த முடியுமென்பதோடு, அவர்களுக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.இக்காப்புறுதித் திட்டத்தை அமுல் செய்தவதன் பிரதான நோக்கம் ஆபத்தான நிலைமையை மட்டுப்படுத்திக் கொள்வதாகும். இதற்கு மேலதிகமாக தெங்குசார் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின்,

- கௌரவம், சமூக அங்கீகாரம் மற்றும் பெறுமானம் என்பவற்றை உயர்த்தல்.
- இடுக்கண்களின் போது பொருளாதார ரீதியான உறுதிப்பாடொன்றை ஏற்படுத்தல்.
- தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல்.
- வயது முதிர்ந்ததன் பின்னர் வாழ்வை ஓட்டுவதற்கான நிரந்தர வருமானமொன்றை

ஏற்படுத்தல்.

**கப்றுக ஊழியப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் அளாவியுள்ள துறைகள்**

- தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அமைச்சின் இணை நிறுவனங்களின் தோட்டங்களும் மற்றும் கைத்தொழிற்சாலைகளும்.
- ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குரிய தென்னந் தோப்புகளும், தெங்குசார் கைத்தொழிற்சாலைகளும்.
- தனியார் தோட்ட உரிமையாளர்களின் கீழ் தென்னந் தோட்டங்களில் தொழில் புரிவோர்.
- தனியார் கைத்தொழில் நிலையங்களில் தெங்குசார் தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்கள்.

## 9.4 தெங்குப் பயிர்ச் செய்கைக்கான சேதனப் பசளை உற்பத்தியையும் பயன்பாட்டையும் பிரபல்யப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்குமான நிகழ்ச்சித் திட்டம்.



**9.4** சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பிரயோகம் என்பவறறை பிரபலயப்படுத்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில்

இரசாயனப் பசளைப் பிரயோகத்திற்கு மாற்றீடாக சேதனப் பசளைப் பிரயோகத்தை பிரபல்யப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதோடு தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சும் அத்தேசியப் பணிக்கு பங்களிப்பை வழங்கும் நோக்கில் தெங்குப் பயிர்ச் செய்கையில் சேதனப் பசளையின் பிரயோகத்தை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தெங்குப் பயிர்ச் செய்கை சபையை வெற்றிகரமாக வழிநடாத்த அமைச்சுக்கு முடியுமாயிற்று.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாவது தென்னங் காணிகளின் மண் வளத்தை செழுமை மிக்கதாக விருத்தி செய்வதற்கு உள்நாட்டில் இயற்கையாக பெறத்தக்க இலாபம் தரவல்ல பொருட்களை சேதனப் பசளையாகப் பயன்படுத்தவும், அகற்றப்பட்ட பொருட்களை மீள்சுழற்சியினூடாக சேதனப் பசளையாக மாற்றவும் சேதனப் பசளைப் பிரயோகம் தொடர்பாகப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஊக்கமளிப்பதுமேயாகும். இரசாயனப் பசளை இறக்குமதிக்காக செலவிடப்படுகின்ற வெளிநாட்டுச் செலவாணியை மட்டுப்படுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் எதிர்பார்ப்பாகும்.

பிரதான மூன்று குழுக்களை இலக்காகக் கொண்டு மூன்று முறைமைகளினூடாக இந்நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

- கப்றுக சங்கங்கள் அல்லது சங்கங்களின் அங்கத்தவர்களூடாக சேதனப் பசளையை உற்பத்தி செய்வோர்.
- சேதனப் பசளைகளோடு அசேதனப் பசளைகளை ஒரு குறை நிரப்பியாக பயன்படுத்துகின்ற தெங்குப் பயிர்ச் செய்கையாளர்கள்.
- சேதனப் பசளையைப் பிரயோகிப்பதற்கான விஷேட அத்தாட்சிப்பத்திரம் உரித்தான தெங்குப் பயிர்ச் செய்கையாளர்கள்.

## 9.5 தெங்குக் கலாச்சார மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

மூன்று தசாப்த பயங்கரவாதம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டவுடன் இலங்கையைச் சுற்றுலாவிற்கானஒரு சுவர்க்க பூமியாக மாற்றக்கூடிய சாத்தியப்பாட்டை இனங்கண்டு, இத்தேசிய பொறுப்பாண்மைக்கு ஓர் உந்து சக்தியாக கௌரவ அமைச்சரின் கொள்கைத் திட்டத்திற்கமைய தெங்குக் கலாச்சார மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் நிருமாணிக்கப்பட்டுவருகின்ற பாசிக்குடா தெங்குக் கலாச்சாரப் பூங்காவில் தெங்கு மற்றும்தெங்குசார்கைத்தொழில்களைக் காட்சிப்படுத்தி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அறிவூட்டவும் கவர்ந்தீர்க்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோல இதற்காக இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற தெங்கு மற்றும் தெங்குசார் மூலப்பொருட்களின் பிரயோகத்தை ஊக்குவித்து அப்பிரதேசத்திற்குள்ளேயே கைத்தொழிலாளர்களை உருவாக்கவும் அவர்களுக்கு உதவிகளை வழங்குவதனூடாக தேசியப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.




9.5 பாசிக்குடா தெங்குக் கலாச்சார பூங்காவின் நுழைவாயில்



9.6 பாசிக்குடா தெங்குக் கலாச்சார பூங்காவின் கண்காணிப்புச் சுற்றுலாவொன்றில் கலந்து கொண்ட கௌரவ அமைச்சர் வெளிநாட்டவர்களுடன்

## 9.6 இணைய வலைப்பின்னல்படுத்தப்பட்ட தேங்காய் ஏலவிற்பனை

இலங்கையெங்கும் பரந்துபட்டுக் காணப்படுகின்ற தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு நியாயமான விலையொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நாடெங்கிலும் விரவிக் காணப்படுகின்ற கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான தேங்காய்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்குமாக தேங்காய் ஏலவிற்பனையை மிகச் சிறந்த வெளிக்காட்டுத் தன்மைகளுடன் கூடியதாக செயற்படுத்தி நிலவுகின்ற பலவீனங்களை குறைந்த மட்டத்தில் பேணி அமைச்சின் அறிவுறுத்துரை மற்றும் வழிகாட்டல் என்பவற்றினூடாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணை சகிதம் தேங்காய் ஏலவிற்பனை இணையமயப்படுத்தப்பட்ட செயற்பாட்டு முறைமையொன்றாக தயார்படுத்தப்பட்டு வருகின்றது. இணைய வலைப்பின்னலோடு இணைக்கப்படுவதன் மூலம் தேங்காய் ஏலவிற்பனையினூடாக அதிகூடிய கொள்வனவாளர்களைக் கவர்ந்தீர்க்கும் அவகாசத்தை வழங்க முடிவதோடு, மிகச் சிறந்த விலைமட்டமொன்றையும் பேண முடியும்.

## 9.7 தரம் வாய்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் நோக்கோடு தெங்குசார் கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்திப் பிரயோக முறைகளை(GMP)அறிமுகப்படுத்தலும் செயற்படுத்தலும்

தெங்குசார் உற்பத்திகளின் தரநிர்ணயம் மற்றும் தரம் என்பவற்றைப் பேணல்,போட்டித் தன்மைகளுடன் கூடிய சிறந்த உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தல் என்பவற்றை அடிப்படைக் குறிக்கோள்களாகக் கொண்டு தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை தரநிர்ணய நிறுவனம் என்பன ஒன்றிணைந்து சிறந்த உற்பத்திப் பிரயோகங்களை (GMP) அறிமுகஞ் செய்துள்ளன.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013.12.31 ஆம் திகதி வரை ஈட்டப்பட்டிருந்த முன்னேற்றங்கள் வருமாறு

| | உற்பத்தி / சேவை | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் தொகை | கணக்காய்வு 1 | கணக்காய்வு 2 | விநியோகிக்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | நறுக்கப்பட்ட தேங்காய் | 47 | 40 | 30 | 26 |
| 2 | தேங்காய்ப் பால் கொழுப்புக்கள் அகற்றப்பட்ட நறுக்குத் தேங்காய் | 2 | 0 | 0 | 0 |
| 3 | தேங்காய் நெய் கொப்பறா | 8 | 0 | 0 | 0 |
| 4 | தும்புநார் பெறுமதி கூட்டப்பட்ட தும்புச் சோறு | 11 | 1 | 1 | 0 |
| மொத்தம் | | 68 | 41 | 31 | 26 |

## 9.8 மாவாக்கப்பட்ட தேங்காய்ப் பால் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

இலங்கைக்குள் தேங்காய்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது உயர்வருமானத்தை ஈட்டித்தரவல்ல கைத்தொழில் நடவடிக்கைகாகவன்றி அன்றாட நுகர்வுக்காகவேயாகும். இவற்றிலும் தேங்காய்ப் பாலை பெறக்கூடிய உள்ளீட்டில் 35%மானவை விரயமாகின்றன. வீட்டலகுகளின் நுகர்வின் போது வினைத்திறனற்ற தேங்காய்ப் பாவனை காரணமாக பயன்படுத்திக் கொள்ள முடிந்த தேங்காய் உள்ளீட்டின் ஒரு பகுதியும், தேங்காயின் ஏனைய பகுதியொன்றும் இவ்வாறு விரயமாகின்றமை காரணமாக கைத்தொழிலுக்கான தேங்காய்களைப் பெற்றுக் கொள்வது ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது.

மாவாக்கப்பட்ட தேங்காய்ப் பால் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தேங்காய்களை கைத்தொழில்கள் மற்றும் நுகர்வுத் தேவைகளுக்காக உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

## 9.9 உயர்ந்த மட்டத்திலான நிலப் பயன்பாடும் அறுவடை மேம்பாடும்

மிக வரையறுக்கப்பட்ட வளமொன்றான காணிகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கோடு, தென்னை மரத்தின் பல்வேறு கால இடைவெளிகளிலும் பல்வேறு பயிரினங்களை ஊடு பயிர்களாகப் பயிரிட முடியும். கொக்கோ, ரம்புட்டான், மா, கொய்யா, மாதுளை, கறுவா, கமுகு, ஆனைக்கொய்யா, மரமுந்திரிகை, மிளகு, அன்னாசி, வாழை, பப்பாசி, இஞ்சி, மஞ்சள், மரவள்ளி போன்ற ஆண்டிற்குள் பலமுறை, இருமுறை அல்லது ஒருமுறை பயிரிடத்தக்க பயிரினங்களை ஊடுபயிராகப் பயிரிடமுடியும். தெங்குப் பயிர்ச் செய்கை சபை,தென்னை ஆராய்ச்சி நிலையம், சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி, குருணாகலை பெருந்தோட்டக் கம்பனி என்பவற்றினூடாகப்

பரிசீலிக்கப்படுகின்ற தோட்டங்களில் இதுவரை வெற்றிகரமாக ஊடுபயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது.

## 9.10 மாதிரித் தோட்ட அபிவிருத்தி

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தென்னந் தோட்டங்கள் சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் நிருவகிக்கப்படுவதால் உச்ச அறுவடையைப் பெற்றுக் கொள்ளும் இலக்கை அடிப்படையாகக் கொண்டகௌரவ அமைச்சின் கொள்கை என்ற அடிப்படையில் செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய மாதிரித் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

**தென்னைப் பயிர்ச் செய்கைக்கு உரித்தான மாதிரித் தோட்டங்கள்**

1. லேனவ மாதிரித் தென்னைப் பூங்கா
2. டேசிவலி மாதிரித் தென்னைப் பூங்கா
3. நாகன்சோலை மாதிரித் தென்னைப் பூங்கா
4. ரன்தெனிய ஆர தென்னம் பூங்கா

**தென்னை ஆராய்ச்சி நிறுவன்துக்குரிய மாதிரித் தோட்டங்கள்**

1. மாகந்துர மரபணு மத்திய நிலையம்
2. தப்போவ தோட்டம்
3. பொத்துக்குளம் ஆராய்ச்சி நிலையம்

**குருணாகலை பெருந்தோட்ட கம்பனிக்குரிய மாதிரித் தோட்டங்கள்**

1. தொடகஸ்லந்தை தோட்டத்தின் தொடகஸ்லந்தைப் பிரிவு
2. தொடகஸ்லந்தை தோட்டத்தின் பானகமுவைப் பிரிவு
3. கிரியால மாகாணத் தோட்டத்தின் கனேவத்தைப் பிரிவு

**சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்குரிய மாதிரித் தோட்டங்கள்**

1. பிங்கிரிய தோட்டப் பிரிவு
2. பலுகஸ்வெவ தோட்டப் பிரிவு
3. திவுலப்பிட்டிய தோட்டப் பிரிவு

## 10. அமைச்சின் வழிகாட்டலோடு தொடர்ச்சியாக அமுல்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

### 10.1 கப்றுக புறவர நிகழ்ச்சித் திட்டம்

தென்னைப் பயிர்ச் செய்கை இலகு மற்றும் மத்தியரக தெங்குசார் கைத்தொழில்களின் பால் பொதுமக்களைத் தூண்டுவதற்காக சிறு நிலச் சொந்தக்காரர்கள் மற்றும் சனசமூக ஒழுங்கமைப்புக்கள் என ஒருங்கிணைத்து அவற்றினூடாக தென்னை மரங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி வறுமை ஒழிப்பை மேற்கொள்வதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் கப்றுக புறவர நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டுவருகின்றது.

கப்றுக நிதியச் சட்டத்தின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுல்செய்யப்படுவதோடு, 2016 ஆம் ஆண்டளவில் நாட்டின் அனைத்து மாவட்டங்களினதும் 180 பிரதேச செயலகப் பிரிவுகளை அளாவியவாறு இது நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கப்றுக புறவர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டிற்குள் இதுவரை 2491 ஆரம்பச் சங்கங்களும்129 வலயச் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன.



10.1 கௌரவ அமைச்சர் கப்றுக புறவர ஒன்றை அங்குரார்ப்பணம் செய்கின்ற சந்தர்ப்பம்

## 10.2 கப்றுக சிப்நெனய் நிகழ்ச்சித் திட்டம்

2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் அளாவிய விதத்தில் ஆறாம் ஆண்டில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு தத்தம் வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்காக பொலிதீன் உறையிடப்பட்ட 1 – 2 வரையிலான தென்னங் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களை தெங்குப் பயிர்ச் செய்கையின் பால் ஊக்குவிப்பதும் வீட்டுத் தோட்டத்தில் தென்னங் கன்றொன்றை நடுவதன் மூலமும் அதனை நன்கு பராமரிப்பதன் மூலமும் மனஎண்ண விருத்தியைத் தூண்டி, அதனூடாக அவர்களின் பெற்றோரையும் தெங்குப் பயிர்ச் செய்கையின் பால் ஊக்குவிப்பதும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். 5 ஆண்டுகளுக்குப் பின்னர் வெற்றிகரமாக தென்னங் கன்றுகளைப் பேணி வளர்த்த மாணவ மாணவிகள் மாவட்ட மட்டத்திலான தெரிவுக்குட்படுத்தப்பட்டு உயர்தரக் கல்விக்கான புலமைப் பரிசிலொன்றும் வழங்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற இந்நிகழ்ச்சித் திட்டம் ஆசிய, பசுபிக் தெங்குச் சமூக சர்வதேசக் கருத்தரங்கில் பெரிதும் மெச்சப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 173,721 பாடசாலை மாணவர்களுக்கு 341,407 தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.



**10.2**கப்றுகய் சிப்நெனய் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கௌரவ அமைச்சர் 6 ஆம் ஆண்டு மாணவியொருவருக்கு தென்னங் கன்றுகளைப் பகிர்ந்தளிக்கும் போது

## 10.3 வெலிகம நோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்

தென்பகுதி பூராவும் பரவிக் காணப்படுகின்ற வெலிகம தென்னோலை வாடல் மற்றும் அழுகல் நோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தெங்குப் பயிர்ச் செய்கை சபை மற்றும் தென்னை ஆராய்ச்சி நிலையம் என்பவற்றின் ஒருங்கிணைப்போடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
காலி மாவட்டத்தில் நோய்வாய்ப்பட்ட மரங்களை அடையாளமிடல், அகற்றல் மற்றும் நட்டஈட்டுத் தொகையைக் கொடுப்பனவு செய்தல் என்பனவும், மாத்தறை மாவட்டத்தில் நோய்வாய்ப்பட்ட மரங்களை அடையாளமிடல் மற்றும் அகற்றல் என்பனவும் தெங்குப் பயிர்ச் செய்கை சபை அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு,மாவட்ட செயலாளரின் பரிந்துரைக்கமைய பிரதேச செயலாளர்களினால் நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுகின்றது. ஏற்கனவே அம்பாந்தோட்டை மாவட்டம் நோயற்ற வலயமாக தென்னை ஆராய்ச்சி நிலையத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நோய்வாய்ப்பட்ட மரத்தை அகற்றுவதற்காக 2000/- உச்ச எல்லை என்ற அடிப்படையில் நட்டஈடு வழங்கப்படுகின்றது.

## 10.4 வலைப்பின்னல்படுத்தப்பட்ட தரவுத்தளம்

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழ் தென்னந்தோட்டங்கள் சிறந்த முகாமைத்துவத்தோடு, உயர்ந்த விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்காக கௌரவ அமைச்சர் அவர்களின் கொள்கையொன்றுக்கமைய செயலாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் 2012 ஆம் ஆண்டில் அதிமேதகு சனாதிபதியவர்களினால் வலைப்பின்னல்படுத்தப்பட்ட தரவுத்தளம் திறந்து வைக்கப்பட்டது.

இது அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு தென்னந் தோட்டத்திலும் தினசரி பறிக்கப்படுகின்ற அல்லது வீழ்கின்ற தேங்காய்களின் தொகை, ஊழியர்களின் தினசரி வருகை மற்றும் வெளியேறுகை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு முறைமையாகும். இதனூடாக தினசரி முற்பகல் 9.00 மணியளவில் அமைச்சரினதும் செயலாளரினதும் கையடக்கத் தொலைபேசிகளுக்கு மின்னஞ்சலினூடக செய்திகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முழுதோட்ட முறைமைகளையும் மேற்பார்வை செய்ய முடிகின்றது.

## 10.5 கப்றுக செய்திப் பத்திரிகை அநுபந்தம்

தெங்குச் சமூகத்துக்கு விரிவாக்கல் மற்றும் கைத்தொழில் தகவல்கள் உள்ளிட்ட துறைசார் புதுப்போக்குகள் தொடர்பான தகவல்களை வழங்கி தெங்குச் சமூகம் மற்றும் அமைச்சு என்பவற்றிடையிலான தொடர்பாடல் ஊடகமொன்றாக அமைச்சின் உத்தியோகபூர்வ செய்திப் பத்திரிகையான "கப்றுக" அநுபந்தம் தினமின, டேலிநியூஸ் மற்றும் தினகரன் செய்திப் பத்திரிகைகளுடன் 2012 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாம் வெள்ளிக்கிழமை தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. 2013 ஆம் ஆண்டில் 12 கப்றுக அனுபந்தங்கள் வெளியிடப்பட்டன.

## 10.6 தென்னைப் புதிய / மீள் /பயிரிடல் மானியம்

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்¼ஏக்கர் முதல் 5 ஏக்கர்கள் வரையிலான காணிகளில் தென்னை பயிரிடுவதற்கு இம்மானியம் வழங்கப்படுவதோடு, அதன் கீழ் பயிர்ச் செய்கையாளர்களுக்கு இலவசமாக தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன இம்மானிய முறை முக்கியமாக 3 பிரதான பகுதிகளாகப் பிரிகின்றது.

I மீள்பயிரிடல் - ஏற்கனவே தென்னை பயிரிடப்பட்டுள்ள போதிலும் வயது முதிர்ச்சி காரணமாக உற்பத்தி குறைந்த பழைய பயிர்ச் செய்கையை முழுமையாக அகற்றிவிட்டு அக்காணிகளில் புதிதாக தென்னங் கன்றுகளை நட்டு அபிவிருத்தி செய்தல்.

II. கீழ் பயிரிடல் - ஏற்கனவே தென்னைப் பயிரிடப்பட்டுள்ள போதிலும் வயது முதிர்ச்சி காரணமாகவோ விளைச்சல் வீழ்ச்சியடைந்தமை காரணமாகவோ உற்பத்தித் திறன் குறைந்த காணிகளில் காணப்படுகின்ற தென்னை மரங்களிடையே முறையாக வரிசையாக தென்னங் கன்றுகளை நட்டு அபிவிருத்தி செய்தல்.

III. புதிய பயிர்ச் செய்கை – தென்னைப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான போதிலும் வேறொரு பயிர்ச் செய்கையோ அல்லது காடோ தற்போது காணப்படுகின்ற காணிகளில் தென்னங் கன்றுகளை நட்டு அபிவிருத்தி செய்தல்.

2013 ஆம் ஆண்டளவில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்23,644 ஏக்கர்களில் தென்னை பயிரிடப்பட்டுள்ளதோடு, 5200 பயிர்ச் செய்கையாளர்களுக்கு 2,169,149 தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.



### 10.7 திவிநெகும நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையில் 10 இலட்சம் வீட்டுப் பொருளாதார அலகுகளை சுபீட்சமுறச் செய்து, இவ்வலகுகளைத் தன்னிறைவு பெற்ற அலகுகளாக மாற்றி நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ளும் நோக்கோடு, பொருளாதார அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்பட்ட நாற்று நடல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தெங்குப் பயிர்ச் செய்கை சபை உயர் பங்களிப்பொன்றை வழங்கியது.

தென்னங் கன்றுகளை பிரதேச அலுவலகங்கள் வரை போக்குவரத்துச் செய்தல், நாற்று நடல், பராமரித்தல் தொடர்பாக அறிவூட்டல் பணிகள் தெங்குப் பயிர்ச் செய்கை சபையினால் மேற்கொள்ளப்பட்டன. 2013 ஆம் ஆண்டளவில் திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2,723,803 தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

### 10.8 சமயத் தலக் காணிகளில் தெங்குப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்

2600 ஆம் புனித புத்தர் ஜயந்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக இலங்கையின் அனைத்து விகாரைகளிலும் தென்னங் கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டமொன்று, 2011 ஆம் ஆண்டில் அமுல் செய்யப்பட்டதோடு,2012 ஆம் ஆண்டிலிருந்து பௌத்த விகாரைகளில் போன்றே ஏனைய சமயத் தலங்களிலும் தென்னை பயிரிடுவதற்கான சமயத்தல நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல் செய்யப்படுகின்றது. அதற்கமைய விகாரைகள், பள்ளிகள், கோவில்கள் போன்ற சமயத் தலங்களிலும் காணப்படுகின்ற காணியின் அளவிற்கேற்ப ஒரு தலத்திற்கு ஒன்று 1 – 10 வரையிலான கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 27,662 தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 10.9 கப்றுக முதலீட்டு கடன் நிகழ்ச்சித் திட்டம்

பிழைப்பூதிய மட்ட தென்னை பயிர்ச் செய்கையாளர் ஒருவரை வர்த்தக மட்ட பயிர்ச் செய்கையாளர் ஒருவராகமாற்றுகின்ற அடிப்படைக் குறிக்கோளுடன் இந்நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு,இதனூடாக மானியத் திட்டத்திற்கு பரிச்சயமாகியிருந்த தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களைப் படிப்படியாக அம்மனநிலையிலிருந்து நீக்கி,அவர்களின் தென்னங் காணிகளை உச்ச மட்டத்திலான உற்பத்தித் திறன் கூடியதாக அபிவிருத்தி செய்து கொள்வதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகள் கடனாக வழங்கப்பட திட்டமிடப்பட்டது. தெங்குப் பயிர்ச் செய்கை சபையோடு 10 தனியார் மற்றும் அரச வங்கிகள் ஒருங்கிணைந்து இத்திட்டத்தை செயற்படுத்துகின்றன. கடனைப் பெற்றுக் கொண்ட பயிர்ச் செய்கையாளர்கள் செயற்றிறன்மிக்க வகையிலும், இணக்கம் கண்ட கருத்திட்டங்களுக்கு அமைவாகவும் ஈடுபடுத்தப்படுகின்றார்களாவென தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் அலுவலர் ஒருவரினால் அடிக்கடி கண்காணிக்கப்படுகின்றனர்.

இக்கடன் திட்டத்தின் கீழ் ஒப்பீட்டு ரீதியாக மிகக்குறைந்த வட்டி வீதத்தில் பயிர்ச் செய்கையாளர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுவதோடு, ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வட்டிச் சலுகைகள் வழங்கப்படுவதனூடாக, இவ்வட்டி வீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கப்றுக கடன் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பயனுறுதி வாய்ந்த வட்டி வீதம் 3.5%- 4% என்பவற்றிற்கிடையிலான பெறுமானமொன்றைப் பெறுகின்றது.

தென்னைப் பயிர்ச் செய்கை, ஊடுபயிர்ச் செய்கை, விலங்கு வேளாண்மை, நீர்ப்பாசன உருவாக்கம், விவசாயப் பண்ணைக்கான இயந்திரப் பொறிகளின் கொள்வனவு போன்ற 11 பிரதான கருத்திட்டங்களுக்கு இதனூடாக கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. 2013 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்

திட்டத்தின் கீழ் 1535 ஏக்கர்களை அபிவிருத்தி செய்வதற்காக 59.46 மில்லியன் ரூபாக்கள் கடனாக வழங்கப்பட்டன.

### 10.10 மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

நாட்டின் பெரும்பாலான காணிகளில் ஏக்கர் ஒன்றிற்கான தென்னை மரங்களின் எண்ணிக்கை சுமார் 40 –50 வரையிலேயே காணப்படுகின்றன. தெங்குப் பயிர்ச் செய்கையில் நிலவுகின்ற இத்தகைய இடைவெளிகளை நிரப்புவதற்காக ஓர் ஏக்கருக்கு அதிகூடியது 24 கன்றுகள் என இலவசமாக தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. வருடத்திற்கு ஒரு நபருக்கு தலா 12 தென்னங் கன்றுகள் முதல் 320 தென்னங் கன்றுகள் வரை விநியோகிக்கப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 198,268 தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

## 10.11 தெங்குசார் கைத்தொழில்களை ஆரம்பித்தல் / நடைமுறையிலுள்ள கைத்தொழில்களின் அபிவிருத்திக்குத் தேவையான தொழிநுட்ப அறிவை வழங்கல்

கிராமிய மட்டத்தில் சாதாரணமாக வீசி எறியப்படுகின்ற தெங்குசார் பொருட்களைப் பயன்படுத்தி குடிசைக் கைத்தொழில்களை நிறுவுவதற்காக ஒவ்வொரு பிரதேசத்திலும் பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தெங்குசார் கைத்தொழில்களுக்காக புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தல், தெங்குசார் கைப்பணிப் பொருட்கள் அலங்காரப் பொருட்கள் என்பவற்றை உற்பத்தி செய்தல் போன்வற்றிற்கான பிரயோக ரீதியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை நடாத்தல் ஆகியன அமுல் செய்யப்பட்டன. மேலும் அவ்வுற்பத்திகளுக்கான சந்தை அறிமுகஞ் செய்தல், சந்தைக்கான உற்பத்தி, கேள்வி தொடர்பான விழிப்பூட்டல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. 2013.12.31 ஆம் திகதியன்று 32 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் தெங்குசார் குடிசைக் கைத்தொழில்களை மேற்கொள்வதற்காக 73 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதோடு, அவற்றினூடாக பயன்பெற்றுள்ள பயனுகரிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 2017 ஆகும்.



**10.4** தெங்குசார் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றின் போது

## 10.12 சிரட்டைகள், தேங்காய் மட்டைகளைச் சேகரித்து கைத்தொழில்களுக்கு ஆற்றுப்படுத்தல்.

பயன்படுத்தப்படாமல் விரயமாக்கப்படுகின்ற தெங்குசார் மூலப்பொருட்களை இனங்கண்டு, கைத்தொழிலுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்ற குறிக்கோளுடன் சிரட்டைகள் மற்றும் தேங்காய் மட்டைகள் சேகரிப்பு நிலையங்களை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் சிரட்டை சேகரிப்பு நிலையங்கள் 47 உம் மட்டை சேகரிப்பு நிலையங்கள் 14 உம் தாபிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு, இவ்வாண்டின் இறுதியில் 30 சிரட்டை சேகரிப்பு நிலையங்களும் 04 மட்டை சேகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இதற்கமைய 667,600 மட்டைகள் சேகரிக்கப்பட்டு பெறுமதிகூடிய உற்பத்தி நடவடிக்கைகளில் 161,075 கிலோ கிராம் பயன்படுத்தப்பட்டது. 766,890 கிலோ கிராம் சிரட்டைகள் சேகரிக்கப்பட்டு 164,535 கிலோ கிராம் சிரட்டைக்கரி உற்பத்தி செய்யப்பட்டதோடு, சிரட்டை சார்ந்த பெறுமதி மிக்க கைத்தொழில்களுக்காக132,555 கிலோ கிராம் சிரட்டைகள் விற்பனை செய்யப்பட்டன.

## 10.13கப்றுக உற்பத்தி ஊக்குவிப்பு நிவாரண கடன் திட்டங்களை அமுல்படுத்தல்.

தெங்கு மற்றும் தெங்குசார் கைத்தொழில் அபிவிருத்தி / நவீனமயமாக்கல் மற்றும் புதுக் கைத்தொழிலை ஆரம்பித்தல் என்பவற்றிற்குத் தேவையான முதலீட்டை வழங்குவதற்கான ஒத்துழைப்பை வழங்கும் நோக்கில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, மக்கள் வங்கி என்பவற்றோடு இணைந்து வருடாந்தம் 6% இலகு வட்டி வீதத்தினடிப்படையில் 2.0 மில்லியன் ரூபாவுக்குட்பட்ட நிதியுதவியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, இதுவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திக் கைத்தொழில்களுக்காக வங்கிக் கடன்களை வழங்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

## 10.14 வழமையாக தெங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத பிரதேசங்களில் தெங்குப் பயிர்ச் செய்கைக்கான பொருத்தப்பாடு தொடர்பான மண்ணாய்வு மதிப்பீடு.

மொணராகலை, அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மண்ணாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. மொணராகலை மாவட்டத்தின் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, 8 பிரதான மண்வகைகளுக்குரிய 33 உப மண்ணினங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இம்மண் வகைகளுக்குள் S1 (ஒருவருடத்திற்குள் ஒரு ஹெக்டெயார் பரப்பில் 15,000 காய்களுக்கு மேற்பட்ட விளைச்சலைத் தரவல்ல) வகுதிக்குரிய மண் வகைகள் இல்லையென்பதோடு,S2(ஓர் ஆண்டிற்குள் ஒரு ஹெக்டெயார் பரப்பில் 12,500 முதல் 15,000 காய்கள் வரையிலான விளைச்சலை தரவல்ல) வகுதிக்குரிய 17,000 ஏக்கர்களை அடையாளம் காண முடியுமாயிற்று.S3 (ஓர் ஆண்டிற்குள் ஒரு ஹெக்டெயார் பரப்பில் 10,000 முதல் 12,500 காய்கள் வரையிலான விளைச்சலை தரவல்ல) வகுதிக்குரிய 90,000 ஹெக்டெயார்களையும்,S4 வகுதிக்குரிய 116,000 ஹெக்டெயார்களையும்,S5 ற்குரிய28,300 ஹெக்டெயார்களையும் இனங்காண முடிந்துள்ளதோடு, ஏனைய காணிகள் தெங்குப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமற்றவையாகும். இவ்வாய்வறிக்கை தெங்குப் பயிர்ச் செய்கையில் அக்கறை காட்டுவோருக்கு வழங்கப்படவுள்ளது. இது தெங்குப் பயிர்ச் செய்கை போன்றே ஏனைய பயிர்ச் செய்கைகளினூடாகவும் உயர் அறுவடையைப் பெற்றுக் கொள்ளத் தேவையான மிக முக்கியமான தகவல்களைத் தருகின்றது.இதற்கமைய மண்ணின் தகைமைக்கேற்ப பயிரிட முடிந்த தெங்கு இனங்களையும் பின்பற்றப்பட வேண்டிய தொழிநுட்ப முறைமைகளையும் பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தீர்மானிக்க முடியும்.

## 11. அமைச்சின் நிருவாகமும் கணக்கு முறையும்

### 11.1அமைச்சின் பதவிகளும் பணியாட் குழுவினர்களும்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | நிரப்பப்பட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| செயலாளர் | 1 | 1 | - |
| மேலதிக செயலாளர்கள் | 2 | 1 | 1 |
| சிரேட்ட உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| பணிப்பாளர் | 1 | 1 | - |
| தலைமைக் கணக்காளர் | 1 | 1 | - |
| உதவிச் செயலாளர்கள் | 2 | 1 | 1 |
| பிரதி/ உதவி பணிப்பாளர்கள் (நிருவாக சேவை) | 2 | - | 2 |
| பிரதி/ உதவி பணிப்பாளர் (திட்டமிடல் சேவை) | 1 | - | 1 |
| உதவிப் பணிப்பாளர்கள் | 2 | 2 | - |
| கணக்காளர் | 1 | 1 | - |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | |
| நிருவாக அலுவலர் | 1 | 1 | - |
| மொழி பெயர்ப்பாளர்கள் | 2 | - | 2 |
| தகவல் தொழிநுட்ப அலுவலர் | 1 | - | 1 |
| அபிவிருத்தி உதவியாளர்கள் | 10 | 3 | 7 |
| அபிவிருத்தி அலுவலர்கள் | 733 | 436 | 297 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 18 | 9 | 9 |
| சாரதிகள் | 10 | 8 | 2 |
| கனிட்ட ஊழியர்கள் | 10 | 09 | 1 |

11.1 அமைச்சின் பதவிகளும் பணியாட் குழுவினர்களும்

### 11.2 அமைச்சின் நிருவாகம்

அமைச்சின் நிருவாகத்தின் கீழ் பிரதானமாக கீழ்வரும் பணிகள் ஆற்றப்படுகின்றன.

1. அன்றாடம் மேற்கொள்ளப்பட வேண்டிய நிருவாக மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்
2. பொது மக்களின் மனுக்கள், முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கையெடுத்தல்.
3. ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்.
4. அமைச்சுக்குரிய நிறுவனங்களின் ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், இடமாற்றல்கள், சேவை நீடிப்புக்கள், ஊழியர் பிணக்குகள் உள்ளிட்ட அனைத்து நிருவாக நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல்.
5. பாராளுமன்றம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும்.
6. சனாதிபதியின் செயலகத்திலிருந்து கிடைக்கின்ற கடிதங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும்.
7. உள்நாட்டு வெளிநாட்டு லீவுகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும்.

8. சுற்றறிக்கைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும்.
9. பட்டதாரிகளின் ஆடசேர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான அனைத்து ஆட்சேர்ப்புக்கள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும்.
10. அமைச்சின் அலுவலர்களின் பயிற்சிகள் தொடர்பான அனைத்து பணிகளும்.

## 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள்

1. 2013 மார்ச் மாதம் 07 ஆம் திகதி தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு 493/1 ஆம் இலக்க மகாவலி அதிகார சபைக்குரிய கட்டிடத்திலிருந்து பத்தரமுல்லையில் அமையப் பெற்றுள்ள செத்சிரிபாய 02 ஆம் கட்டிடத்தின் 8 ஆம் மாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டமையும் அமைச்சு அக்கட்டிடத்தில் அமையப் பெற்றமையும்.

2. பல்வேறு நிறுவனங்களினால் கடிதங்களூடாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் தொடர்பாக உரியவர்களுக்குப் பொருத்தமான நிவாரணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, மிகச் சிக்கலான விடயங்கள் தொடர்பில் நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் தருவிக்கப்பட்டு பொருத்தமானவாறு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற அனைத்து கடிதங்கள் தொடர்பாகவும் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

3. தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி ஆலோசனைச் செயற்குழுக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டுள்ளதோடு, அங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பான முன்நடவடிக்கைகளை எடுத்தல்.

4. அமைச்சிற்குரிய நிறுவனங்களினதும் அமைச்சினதும் ஆடசேர்ப்புக்கள், நியமனங்கள், இடமாற்றல்கள், சேவை நீடிப்புக்கள் மற்றும் ஊழியர் பிணக்குகள் தொடர்பாக நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. இங்கு கீழ்வருமாறான ஆட்சேர்ப்புக்கள், இடமாற்றல்கள் அமைச்சு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வமைச்சிலிருந்து 2013 ஆம் ஆண்டில் முதல் ஒரு முகாமைத்துவ உதவியாளர் கேட்டு விலகியுள்ளார்.

- பணியாட் குழுவினரின் ஆட்சேர்ப்பும் அமைச்சுக்கான இடமாற்றல்களும்

| திகதி | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 2013.10.02 | உதவிப் பணிப்பாளர் (புதுநியமனம்) | 01 |
| 2013.04.12 | சிரேட்ட உதவிச்செயலாளர் | 01 |
| | கனிட்ட ஊழியர் | 02 |

11.2 ஆட்சேர்ப்பும் அமைச்சுக்கான இடமாற்றமும்

2013 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு 398 பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதோடு, அமைச்சிலிருந்து 06 பட்டதாரிகள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

- அமைச்சின் அலுவலர்கள் வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லல்.

| திகதி | பதவி | நிலையம் |
|---|---|---|
| 2013.04.10 | சிரேட்ட உதவிச் செயலாளர் | இளைஞர் விவகார, திறன் விருத்தி அமைச்சு |
| 2013.03.11 | கனிட்ட ஊழியர் | படல்கும்புர பிரதேச செயலகம் |
| 2013.06.03 | கனிட்ட ஊழியர் | அஞ்சல் சேவைஅமைச்சு |
| 2013.06.13 | சாரதி | தணமல்வில பிரதேச செயலகம் |
| 2013.07.17 | கனிட்ட ஊழியர் | லாஹுகல பிரதேச செயலகம் |
| 2013.12.06 | சாரதி | மீள்குடியேற்ற அமைச்சு |

**11.3** அமைச்சின் அலுவலர்கள் வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லல்.

2013 ஆம் ஆண்டில் அமைச்சின் எந்தவோர் அலுவலரும் இளைப்பாறவில்லை.

5. அமைச்சின் இணை நிறுவனங்களின் கீழ்வரும் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| நிறுவனம் | ஆண்டு |
|---|---|
| **வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி** | 2010, 2011,2012 |
| **தென்னை ஆராய்ச்சி நிலையம்** | 2010,2011 |
| **தெங்குப் பயிர்ச் செய்கை சபை** | 2011 |
| **வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்டக் கம்பனி** | 2012 |
| **தெங்கு அபிவிருத்தி அதிகார சபை** | 2011,2012 |

**11.4**அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கைகள்

## 11.3 அமைச்சின் கணக்கு முறை

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கணக்குப் பிரிவு ஒரு தலைமைக் கணக்காளர், ஒரு கணக்காளர்ஆகியோரை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. அதன் கீழ் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நிரந்தர பணியாட்குழுவின் நால்வர் பணிபுரிகின்றனர். இதற்கு மேலதிகமாக கனிட்ட ஊழியராக ஒருவர் பணியாற்றுகின்றார். அதேபோன்று அபிவிருத்தி அலுவலர்கள் மூவர் கடமையாற்றுகின்றனர்.

இவ்வமைச்சுக்குரிய செலவுத் தலைப்பிலக்கம் 178 ன் கீழ் 2013 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட செலவினங்களின் பொழிப்பு வருமாறு :-

01. அமைச்சரின் அலுவலகம் (மீண்டெழும் செலவினம்)

ரூபா. '000

| செலவு விடய இலக்கம் | விபரம் | மொத்த ஒதுக்கீடு | உள்ளபடியான செலவினம் |
|---|---|---|---|
| | ஆட்களின் வேதனாதிகள் | 9,660 | 9,654 |
| | ஏனைய செலவினங்கள் | 18,970 | 18,760 |
| | **அமைச்சரின் அலுவலகம் (மூலதனச் செலவினம்)** | | |
| | **முதலீட்டுப் பொருட்களின் மறுசீரமைப்பும் விருத்தியும்** | | |
| 2001 | கட்டிடங்களும் நிருமாணங்களும் | 6,960 | 6,955 |
| 2002 | இயந்திரங்களும் இயந்திரப் பொறிகளும் | 1,400 | 1,379 |
| 2003 | வாகனங்கள் | 2,050 | 2,037 |
| | **முதலீட்டுப் பொருட்களைக் கையகப்படுத்தல்** | | |
| 2101 | வாகனங்கள் | 8,962 | 8962 |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 2,670 | 2661 |
| 2103 | இயந்திரங்களும் இயந்திரப் பொறிகளும் | 150 | - |

02. அமைச்சின் அலுவலகம் (மீண்டெழும் செலவினம்)

| | | | |
|---|---|---|---|
| | ஆட்களின் வேதனாதிகள் | 60,744 | 60,628 |
| | ஏனைய செலவினங்கள் | 49,724 | 49,338 |

| செலவு விடய இலக்கம் | விபரம் | மொத்த ஒதுக்கீடு | உள்ளபடியான செலவினங்கள் |
|---|---|---|---|
| | **அமைச்சின் அலுவலகம் (முதலீட்டுச் செலவினங்கள்)** | | |
| | **முதலீட்டுப் பொருட்களின் மறுசீரமைப்பும் விருத்தியும்** | | |
| 2001 | கட்டிடங்களும் நிருமாணங்களும் | 10,570 | 10,566 |
| 2002 | இயந்திரங்களும் இயந்திரப் பொறிகளும் | 500 | 500 |
| 2003 | வாகனங்கள் | 1,700 | 1,294 |

**முதலீட்டுப் பொருட்களைக் கையகப்படுத்தல்**

| | | | |
|---|---|---|---|
| 2101 | வாகனங்கள் | 6,130 | 6,129 |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 1,600 | 1,597 |
| 2103 | இயந்திரங்களும் இயந்திரப் பொறிகளும் | 350 | - |
| 2401 | பயிற்சியளித்தலும் ஆற்றல் விருத்தியும் | 450 | 441 |

இச்செலவினைத் தாங்கிக் கொள்வதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து செலவுத் தலைப்பு 178 ன் கீழ் கிடைக்கப் பெற்ற மொத்த கட்டுநிதித் தொகை ரூபா 206,480,000ஆகும். 2013 ஆம் ஆண்டிற்குள் உண்மையில் கிடைக்கப்பெற்ற வருமானம் வருமாறு.

| செலவுத் தலைப்பு குறியீட்டிலக்கம் | விபரம் | உள்ளபடியான செலவினம் |
|---|---|---|
| 20.02.01.01 | அரசாங்க கட்டிடங்களின் வாடகைகள் | 113,580.00 |
| 20.02.02.99 | ஏனையவை | 200,917.19 |
| 20.03.99.00 | விற்பனையும் கட்டணமும் - ஏனைய கிடைப்பனவுகள் | 343,912.01 |

இவ்வமைச்சின் அரசாங்க அலுவலர்களின் முற்பணங்கள் "B" கணக்கு தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | செலவினங்களின் உச்ச எல்லை | கிடைப்பனவுகளின் அதிகுறைந்த | பற்று நிலுவையின் உச்சஎல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தினூடாக அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகள் | 4,000,000.00 | 800,000.00 | 8,000,000.00 |
| ஆண்டிற்குள் மீளாய்வு செய்யப்பட்ட எல்லைகள் | | | |
| 1 கட்டளை இலக்கம் | | | |
| ஆண்டிறுதியில் உள்ளபடியான பெறுமானங்கள் | 2,957,304.17 | 1,142,388.64 | 5,824,870.75 |
| (நி.பி 503 (i) கீழான சீராக்கல்கள் | 1,006,463.00 | 732,311.00 | |
| | 3,963,767.17 | 1,874,699.64 | 5,824,870.75 |

## 11.4 2013 ஆம் ஆண்டின் பொதுத் தாளாண்மை செயற்குழு

வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்ட கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட கம்பனி என்பவற்றிற்கானபொதுத் தாளாண்மை செயற்குழுக் கூட்டங்கள் 2013 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்டன. அப்போது அவ்விரண்டு நிறுவனங்களுக்கும் 2012 ஆம் ஆண்டில் மிகச்சிறந்த முன்னேற்றமொன்றை ஈட்டுக் கொண்டுள்ளமை தொடர்பாக பொதுத் தாளாண்மைச் செயற்குழுவினால் அவ்விரண்டு கம்பனிகளும் புகழப்பட்டன.

## 11.5 அமைச்சின் கணக்காய்வு

2013 ஆம் ஆண்டிற்குள் அமைச்சினால் 4 முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்கூட்டங்கள் 4 நடாத்தப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டோடு தொடர்புடைய 14 கணக்காய்வு விசாரணைகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, அக்கணக்காய்வு விசாரணைகள் 14 க்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது.